வடகிழக்கு பருவமழை முன்எச்சரிக்கை நடவடிக்கை

சென்னை – காஞ்சிபுரத்தில் மின்மாற்றிகள், மின் கம்பங்கள், மின்கடத்திகள், தளவாட பொருட்களின் கையிருப்பு: அலுவலர்களுடன் செந்தில்பாலாஜி ஆலோசனை

மின் தடங்கலா? மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசு அலுவலகங்கள், செல்போன் டவருக்கு முன்னுரிமை

அலைபேசியை 'ஆப்' செய்து வைக்கக்கூடாது என்று கண்டிப்பு

சென்னை, அக்.9–

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார். வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் மண்டலங்களில் 392 மின்மாற்றிகள், 4,444 மின் கம்பங்கள் மற்றும் 2,484 கி.மீ. மின்கடத்திகள் உட்பட அனைத்து தளவாட பொருட்களின் கையிருப்பு நிலை குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்கள் அனைவருக்கும் கீழ்கண்ட அறிவுறுத்தல்களை அமைச்சர் வழங்கினார்.

தரை மட்டத்துக்கு மேல் பில்லர் பாக்ஸ்

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மழைநீர் தேங்கும் பகுதிகளில், அடையாளம்காணப்பட்ட அனைத்து தாழ்வு நிலையிலான பில்லர் பாக்ஸ்கள் தரை மட்டத்திற்கு மேல் ஒரு மீட்டர் உயரத்தில் நிறுவும் பணிகள் உடனடியாக முடிக்கப்பட வேண்டும். இதற்குரிய அனைத்து நடவடிக்கைளையும் சென்னை மற்றும் காஞ்சிபுர மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் மேற்கொண்டு பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவதை உறுதி செய்ய வேண்டும்.

பில்லர் பாக்ஸ்கள் அனைத்தும் உரிய முறையில் பராமரிக்கப்படுவதை அந்தப் பகுதியை சார்ந்த செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும். மரம் வெட்டும் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் இயங்கும் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் மற்றும் தேவைப்படும் அனைத்து தளவாடப் பொருட்களையும் இருப்பில் வைத்துக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஜே.சி.பி., கிரேன்கள் உள்ளிட்ட வாகன உரிமையாளர்களின் தொலைபேசி எண்களை முன்னமே கேட்டறிந்து அவைகளின் தயார்நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.

மின் தடங்கல் ஏற்படின் முதற்கட்டமாக மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் செல்போன் டவர்கள் அனைத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

தயார் நிலையில் வாகனங்கள்

வாரிய வாகனங்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும். காற்றுடன் கூடிய மழையின் போது மிகத் தாழ்வான நிலையில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து விழுவதை தடுக்க உரிய நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற மழைக் காலங்களில் உயர் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினருடனும், தீயணைப்பு துறையினருடனும் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும்.

பேரிடர் காலங்களில் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் தங்குவதற்கு உரிய பள்ளிகள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் அடையாளம் காணப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அனைத்து அலுவலர்களும் தமது அலைபேசியை எந்தக் காரணம் கொண்டும் ஆப் செய்து வைக்கக்கூடாது எனவும், இதனை மீறுபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் எச்சரித்தார்.

மேலும், மழைக்காலங்களில் தகவல் தொடர்பில் தொய்வு ஏற்படாமல், மின்சார பணிகள் தொடர்பான தகவல்களை பரிமாறிக்கொள்ள வாக்கி டாக்கி இயந்திரங்களை உடனடியாக கொள்முதல் செய்ய உத்தரவிட்டார்.

மின் தடங்கல் காரணம் கண்டுபிடியுங்கள்

கடந்த 1.4.2024 முதல் 30.9.2024 வரை சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டலங்களில் ஏற்பட்ட மின்தடங்கல் பற்றியும் விரிவான ஆய்வினை மேற்கொண்டு, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

மின் சேவைகள் மற்றும் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 9498794987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் க.நந்தகுமார், பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் விஷு மஹாஜன், இயக்குநர் கு.இந்திராணி, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடியில் புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளம்: உதயநிதி திறந்து வைத்தார்

சென்னை, அக்.9–

சென்னை மெரினா கடற்கரையில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 114க்கு உட்பட்ட மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தினை நேற்றுபொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, துணை முதலமைச்சர், மெரினா நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்கான க்யூ. ஆர். கோடு கட்டண சேவையைத் தொடங்கி வைத்து, நீச்சல் குளத்தினை சுற்றி பார்வையிட்டார்.

மெரினா நீச்சல் குளமானது, 1942–ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் போது உருவாக்கப்பட்டது. 1947–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை மாநகராட்சியிடம் இந்த நீச்சல் குளம் ஒப்படைக்கப்பட்டது. 1947–ம் ஆண்டு முதல் தொடர்ந்து 77 ஆண்டுகளாக சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் தனியார் பராமரிப்பில் விடப்பட்ட இந்த நீச்சல் குளம் தற்போது ரூ.1 கோடியே 37 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியால் நேரடியாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தின் நடைபாதையை சீரமைத்து வர்ணம் பூசுதல், நடைபாதையில் புதிய கற்கள் மற்றும் ஓடுகள் பதித்தல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள், பார்வையாளர்கள் அமரும் இடத்தில் மேற்கூரை அமைத்தல், குளத்தைச் சுற்றியுள்ள சுவரில் வண்ண ஓவியம் வரைந்து அழகுபடுத்துதல், ஒப்பனை அறை, குளியலறை, உடை மாற்றும் அறைகளை பழுதுபார்த்து மேம்படுத்துதல், போதிய மின்விளக்கு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் குளம் 100 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. குறைந்த அளவாக 3.5 அடியும், அதிக அளவாக 5 அடி உயரமும் உடையது. மேலும், இந்த நீச்சல் குளமானது காலை 5.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை செயல்படும். காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை பெண்களுக்கான நேரமாகும்.

இந்த நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்காக கியூ. ஆர். கோடு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் குளத்தில் 1 மணி நேரத்திற்கு பெரியவர்களுக்கு ரூ.50 எனவும், இதனை ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு சிறப்புச் சலுகையாக ரூ.45–ம், 12 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ரூ.30– எனவும், ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு சிறப்புச் சலுகையாக ரூ.25 எனவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் குளமானது, பராமரிப்புப் பணி காரணமாக திங்கட்கிழமை அன்று வார விடுமுறை விடப்படுகிறது. இந்த நீச்சல் குளம் இன்று (9–ந் தேதி) முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செயல்படும்.

இந்த நீச்சல் குளத்தில் 10 உயிர் பாதுகாவலர்கள், 8 தூய்மைப் பணியாளர்கள், 10 சுத்தம் செய்யும் பணியாளர்கள், 2 கண்காணிப்பாளர்கள், 6 பாதுகாவலர்கள், 2 எலக்ட்ரீஷியன் மற்றும் பிளம்பர் என மொத்தம் 38 பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராம லிங்கம், நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், இணை ஆணையாளர் ஜெ.விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளும்கட்சித் துணைத் தலைவர் தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியானா சட்டசபை தேர்தலில் நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி: 'பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, அக்.9

அரியானாவில் 3வது முறையாக பா.ஜனதா வாகை சூடியது மாநிலத்தின் வளர்ச்சி, நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

காஷ்மீர், அரியானா மாநில சட்டமன்ற தேர்தல் வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் அரியானாவில் 3வது முறையாக பா.ஜனதா அபார வெற்றி பெற்றுள்ளது. காஷ்மீரில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைகிறது.

இந்த தேர்தல் முடிவுகள் தொடர்பாக பிரதமர் மோடி தனது 'எக்ஸ்' தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

தொடர்ந்து 3வது முறையாக பா.ஜனதாவுக்கு பெரும்பான்மையை வழங்கியதற்காக அரியானா மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். இது மாநிலத்தின் வளர்ச்சிக்கும், நல்லாட்சிக்கும் கிடைத்த மகத்தான வெற்றி. இதன் மூலம் பா.ஜனதா வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது. காஷ்மீரில் பா.ஜனதா அதிக இடங்களை பெற்றுள்ளது. யூனியன் பிரதேசத்தில் பா.ஜனதாவின் செயல்திறனில் பெருமைப்படுகிறேன். பா.ஜனதாவுக்கு வாக்களித்த மற்றும் எங்கள் மீது நம்பிக்கை வைத்த அனைவருக்கும் நன்றி.

ஜம்முகாஷ்மீர் ஜம்முகாஷ்மீர் நலனுக்காக நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம். 370 மற்றும் 35 (ஏ) சட்டங்கள் நீக்கப்பட்ட பின்னர் முதன் முறையாக நடத்தப்பட்ட தேர்தலில் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து உள்ளனர். இதற்காக யூனியன் பிரதேசத்தின் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இவ்வாறு மோடி குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் மத்திய அமைச்சர் அமித்ஷா தனது 'எக்ஸ்' தள பதிவில், 'பயங்கரவாதம் அதிகரித்திருந்த காஷ்மீரில், மக்கள் ஜனநாயக கடமையாற்றி அமைதியாக தேர்தலை நடத்தி முடித்து தங்களது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

மக்களுக்காக தொடர்ந்து உழைப்போம். அமைதியாக தேர்தலை நடத்தி முடித்த தேர்தல் ஆணையத்தையும், போலீசாரையும் பாராட்டுகிறேன்' என்று கூறியுள்ளார்.

"ரூ.100 கோடிக்கு இலக்கை எட்டுங்கள்": கதர் கிராமத் தொழில் வாரிய ஆய்வுக் கூட்டத்தில் ராஜகண்ணப்பன் வலியுறுத்தல்

சென்னை, அக். 9–

பால்வளத்துறை மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முன்னேற்றத்திற்கான ஆய்வுக் கூட்டம் குறளகத்தில் நடைபெற்றது.

இவ்வாய்வில் கதர் கிராமத் தொழில் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை ரூ.100 கோடிக்கு குறையாமல் மேற்கொண்டு வாரிய பணியாளர்கள் திறம்பட பணியாற்றி இந்நிதியாண்டில் இலக்கினை அடைய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

வாரிய வருவாயினை அதிகரித்திட, வாரிய கட்டுப்பாட்டிலுள்ள நிலங்கள் மற்றும் கட்டடங்களை வாடகை, குத்தகை விடுவதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளவேண்டும் எனவும், வாரியத்தின் செயல்பாடுகளில் இந்நிதியாண்டிற்குள் நல்லதொரு முன்னேற்றம் அடைந்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் செயல்படும் 70 சர்வோதய சங்கங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்ததோடு, சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையில் முன்னேற்றத்தினை அடைய வேண்டும் எனவும் அமைச்சர் அறிவுறுத்தினார். இவ்வாய்வில் கைத்தறி துறை அரசு செயலாளர் வெ.அமுதவல்லி, வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் ப.மகேஸ்வரி மற்றும் சர்வோதய சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.

அமெரிக்கா, கனடா விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிப்பு

ஸ்டாக்ஹோம், அக். 9

அமெரிக்காவை சேர்ந்த விஞ்ஞானி ஜான் ஹாப்பீல்டு மற்றும் கனடாவின் ஜெப்ரே ஹிண்டன் ஆகியோருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைப்பவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் நேற்று முன்தினம் முதல் அறிவிக்கப்பட்டு வருகிறது. முதல் நாளில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

மரபணு செயல்பாட்டை ஒழுங்குபடுத்தும் மைக்ரோ ஆர். என்.ஏ.க்களின் கண்டுபிடிப்புக்காக அமெரிக்க விஞ்ஞானிகளான விக்டர் அம்புரோஸ் மற்றும் கேரி ருவ்குன் ஆகியோருக்கு கூட்டாக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இயற்பியலுக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜான் ஜே ஹாப்பீல்டு மற்றும் கனடாவில் வசிக்கும் இங்கிலாந்து விஞ்ஞானி ஜெப்ரே ஹிண்டன் ஆகியோருக்கு இந்த பரிசு பகிர்ந்தளிக்கப்படுவதாக நோபல் பரிசு கமிட்டி அறிவித்துள்ளது.

இயற்பியல் கருவிகளைப் பயன்படுத்தி இன்றைய சக்திவாய்ந்த எந்திர கற்றலுக்கு அடிப்படையாக இருக்கும் முறைகளை உருவாக்கியதற்காக இந்த பரிசு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இயற்பியலுக்கான நோபல் பரிசு 11 மில்லியன் சுவீடிஷ் குரோனர் (சுமார் ரூ.8 கோடியே 39 லட்சம்) பரிசு தொகையை கொண்டதாகும்.

மருத்துவம் மற்றும் இயற்பியலை தொடர்ந்து, வேதியலுக்கான நோபல் பரிசு இன்றும், இலக்கியத்துக்கானது நாளையும் அறிவிக்கப்பட உள்ளன. அமைதிக்கான நோபல் பரிசு 11ந்தேதியும், பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு 14ந்தேதியும் அறிவிக்கப்படும். நோபல் பரிசு நிறுவனரான ஆல்பிரெட் நோபலின் நினைவு நாளான டிசம்பர் 10ந்தேதி ஸ்டாக்ஹோமில் நடைபெறும் விழாவில் இந்த விருதுகள் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 23.10.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி/கணவன் பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	104142510742	ஜி துளசிதரன்	S/o. கோதண்டராமன்	எண். 8, பெருமாள் கோவில் தெரு புளியரணங்கோட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தமிழ்நாடு 603311	06-06-2024	93896.7328
சென்னை	104142510722	செல்வா கே யு	S/o. உதயசூரியன்	458/2, பார்க் தெரு, ஐசிஎப் காலனி எஸ்.ஓ.ஐசிஎப் தெற்கு காலனி, சென்னை, தமிழ்நாடு 600038	03-06-2024	132742.85
சென்னை	104142510718	ஹலிதா பி.ஏ	S/o. அப்துல் ரஹ்மான்	2/29, திலகவதி தெரு, கங்கை நகர் அம்பத்தூர், கள்ளிக்குப்பம், திருவள்ளூர் தமிழ்நாடு 600053	01-06-2024	139078.61
சென்னை	104142510692	ரேஷ்மா வி	S/o. வீரபத்திரன்	2/13A, கோபால் தெரு ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர், சென்னை, தமிழ்நாடு 600083	29-05-2024	53984.52
சென்னை	104142510644	சி தேவானந்தன்	S/o. வி சந்திரசேகர்	31பி சந்திர பாபு காலனி, பொன்னியம்மன்மேடு, திருவள்ளூர் தமிழ்நாடு 600110	18-05-2024	205237.20
சென்னை	104142510572	கே ஜவஹர்	S/o. கிருஷ்ணமூர்த்தி	எண் 5, செயின்ட் பால் தெரு, லீபன்புரம், கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, சென்னை, தமிழ்நாடு 600118	29-04-2024	144666.25
சென்னை	104142510539	பி பிரகாஷ்	S/o. பழனிசாமி	எல்ஐஜி மனை எண் 42, பிளாக் 53, 40வது தெரு, இடையன்சாவடி அய்யா கோயில் அருகில், மணலி நியூ டவுன், திருவள்ளூர் தமிழ்நாடு 600103	22-04-2024	744377.99
சென்னை	104142510534	மோனிகா ஜெயின்	S/o. மனிஷ் ஜெயின்	எண் 41–47, 3வது தளம், வெங்கட்ராமன் தெரு, நோபல் பள்ளி அருகில், சென்னை, ஜி.பி.ஓ. கொண்டிதோப்பு, சென்னை, தமிழ்நாடு 600001	21-04-2024	129344.24
சென்னை	104142510292	ஆர் பாபு	S/o. ராஜேந்திர ராஜு	எண் 2/31,1வது தெரு திருத்தணி வி.கே.என்.கண்டிகை, ஆர்சி கடையம் கிராமம், திருவள்ளூர், திருவள்ளூர் தமிழ்நாடு 631205	24-02-2024	182411.27
சென்னை	104142510227	ஃபராஸ் ஏ எஸ்	S/o. சலீம் அக்தர் ஜி	20/68, தரை தளம் அஷர்கானா தெரு ஆலந்தூர், சென்னை தமிழ்நாடு 600016	13-02-2024	127847.21
சென்னை	101042519421	மணிகண்டன் ஏ	S/o. ஆவுடையப்பன்	70 2 பெருமாள் கோயில் தெரு, வடக்கு திட்டங்குளம், தூத்துக்குடி தூத்துக்குடி, தமிழ்நாடு 628502	15-12-2023	110541.61
சென்னை	101042518980	ஷீலா பி	S/o. சங்கர் பாபு	32 கும்மாளம்மன் கோயில் தெரு, டெய்லர்ஸ் சாலை, கீழ்பாக்கம், இந்தியா, சென்னை, சென்னை தமிழ்நாடு 600010	20-11-2023	88737.21
சென்னை	104142510645	ஹேமலதா டி	S/o.நாராயணசாமி ரெட்டி	31 பி, சந்திர பிரபு காலனி, பொன்னியம்மன்மேடு திருவள்ளூர், தமிழ்நாடு 600110	18-05-2024	138656.32
சென்னை	101042518266	வி ஆர் தங்கவேல்	S/o. ராமசாமி	13 7 ,கோபால் தாஸ் தெரு, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு 600002	09-10-2023	35094.80

ஏல தேதி 23.10.2024 அன்று மாலை 3.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.